23.09.2024

அ.வ.எண். 1071-2017 மற்றும் 160-2021, 8-2021

வாசா.4 - தங்கவேலு

<u>1 முதல் 5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் கோயம்புத்தூர் வாதி வழக்கறிஞர் அலுவலகத்தில் நான் சொல்லி டைப் செய்து தயார் செய்யப்பட்டது என்றால் ஆமாம். விஜயசக்தி ராகவன் மற்றும் தனபாலும் எனக்கு சொந்த சித்தப்பா மக்கள். என்னுடைய முப்பாட்டன் பெரியா கவுண்டர் பற்றி தெரியுமா என்றால் தெரியாது, என்னுடைய முப்பாட்டன் பெயர் மாரப்ப கவுண்டர். நான் 614 காலை 4 ஏக்கர் விஸ்தீரணம் பொறுத்து நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன், அந்த காலையின் மொத்த விஸ்தீரணம் பற்றி எனக்கு தெரியாது. இந்த 4 ஏக்கர் விஸ்தீரணம் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. தற்போது வழக்கு சொத்து காலியிடமாக தான் உள்ளது. தற்போது வழக்கு சொத்தின் உட்பிரிவு எண் என்ன என்பது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்து என்னுடைய தாத்தாவின் தகப்பனார் மாரப்பனுக்கு கிரயப்படி பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய தாத்தா இறந்து பல வருடங்கள் ஆகி என நான் எனது முதன்மை வாக்குமூலத்தில் சொல்லி உள்ளது எனது அய்யன் மாரப்ப கவுண்டரை தான்.

அவர் இறந்த பின்னிட்டு சக்திகுமார் மற்றும் தனபாலும் உயில் தயார் செய்து கொள்ள எந்த தேதி, மாதம், வருடம் என்னை அழைத்தார்கள் என்றால் 1998 ம் வருடம் தேதி, மாதம் தெரியாது. அவர்கள் எந்த வருடம் உயில் ஆவணத்தை தயார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. ராமசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தை பிரதிவாதிகள் அபகரிக்க முயல்கிறார்கள் என நான் சொல்லி உள்ளேன், அதில் சொத்து ராமசாமிக்கு பாத்தியப்பட்டது எனக்கு வாதிகள் சொல்லி தெரியுமா என்றால் இல்லை, எனக்கே தெரியும். என் தாத்தாவின் தகப்பனார் மாரப்ப கவுண்டர் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது. என் தாத்தாவின்

தகப்பனார் மாரப்ப கவுண்டர், அவரது தகப்பனார் பெரியா கவுண்டரின் 2 வது தாரத்து மகன் என்றால் இல்லை.  ஊருக்குள் உள்ள பூர்வீக சொத்தை பொறுத்து ராமசாமி என் தகப்பனார் பெயரிலும், மற்ற வாரிசுகள் பெயரிலும் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரிந்தும் நான் பொய்யாக தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி ராமசாமி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பெரியா கவுண்டருக்கு முதல் மனைவி மூலம் பெரிய மாரப்ப கவுண்டரும் 2 வது மனைவி மூலம் மாரப்ப கவுண்டரும் வாரிசுகள் என சொல்லி உள்ளது எனக்கு தெரிந்தும், தெரியாது என மறுத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் 30.08.2024 ல் நான் நீதிமன்றத்தில் இருந்து சாட்சிய அழைப்பாணை பெற்றுக் கொண்டேன், அதன் பின்னிட்டு என்னை சக்திகுமார் (எ) விஜயராகவன், என்னை கம்பியால் அடித்து கொலை செய்ய முயற்சித்தார்கள் என்று சொல்லி உள்ளேன். ஆனால் அதற்கு முன்பாகவே என் சித்தப்பா குடும்பத்திற்கும் எனக்கும் பாதை தகராறு இருந்து அதில் 18.06.2024 ல் என் பெயரில் புகார் கொடுக்கப்பட்டு அதன் பெயரில் கொடுக்கப்பட்ட மனு ரசீது தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் எனக்கு தெரியாது. ஆனால் அன்றைய தேதியில் அதேபோல் தடம் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு நாங்கள் காவல் நிலையம் சென்றோம், புகார் கொடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. காவல் துறையினர் விசாரணை செய்து சிவில் வழக்கு என்பதால் உங்களுக்குள் பேசி முடித்து கொள்ள சொன்னார்கள்.

அதே பிரச்சனை சம்மந்தமாக நானும், கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து சக்திகுமார் (எ) விஜயராகவன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து 2 புகாரின் பெயரிலும் குற்ற வழக்கு எண்.382/24, 383/24 என்ற இரண்டு முதல் தகவல் அறிக்கையில் இருவரது பெயரிலும் பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். எனவே எங்களுக்குள் நடந்த தகராறு என்பது எங்களது நிலத்திற்கானது தவிர இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க சம்மன் வந்த

பின்னிட்டு ஏற்பட்ட தகராறு இல்லை என்றால் சரியல்ல. சக்திகுமார் (எ) விஜயராகவனுக்கு எனது தாத்தா எந்தவித உயில் ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை என்றும் அவர் போலியாக உயில் ஆவணம் உற்பத்தி செய்துள்ளார் என்றும் நான் சொல்லும் நிலையில் என் தாத்தாவிற்கு நானும் ஒரு பெயரன் என்ற நிலையில் இன்று வரை அந்த உயில் ஆவணத்தை எதிர்த்து நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வாதி தரப்பில் சொன்னதன் பெயரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். உயில் சாசனத்தின் படி என்னுடைய சித்தப்பா மக்கள் வழக்கு சொத்தை இன்றுவரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் இல்லை. எனக்கும் எனது சித்தப்பா கந்தசாமி குடும்பத்திற்கும் இடையே ஏற்கனவே உள்ள பகையை முன்விரோதம் அடிப்படையில் நான் அவர்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மை நிலவரங்களை அறியாமல் சாட்சியம் அளிப்பதால் இந்த சாட்சியம் ஏற்றுக் கொள்ள கூடாது என்றால் சரியல்ல. மறுவிசாரணைஇல்லை.

Sd/தங்கவேலு

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur